(3) மின்பகிர்மான உரிமம்தாரர்–

(a) அவர்களுடைய மின்கட்டணம் நிர்ணயிக்குமாறு கோரும் விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக நீண்டகால மின்கொள்முதல் திட்டத்தை திட்டமிடுகையில் மற்றும் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கையில்,

(b) மின்சுமை மேலாண்மை, மின்சேமிப்பு மற்றும் மின்திறன் பொறுத்து அவர்களால் நிறைவேற்றப்படவேண்டிய உத்தேச நடவடிக்கைகள் குறித்து ஆணையத்திற்கு அறிக்கை சமர்பிக்கையில்,

(c) செலவுச் சலுகை ஆய்வுடன் சேர்த்து மின்சாரம் மற்றும் தேவை பற்றிய மாற்றம் குறித்து ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கையில்,

இந்த ஒழுங்குமுறைவிதிகளினால் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கையில், மின்பகிர்மான உரிமம்தாரர், இது குறித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையத்தின் வழிகாட்டுதல் நெறிகளின் மூலம் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**5. மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கான தொழில் நுட்ப நிலைகளை மதிப்பிடுதல்:–**

(1) மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கான தொழில்நுட்ப நிலையின் முதல் மதிப்பீடுகையானது, இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் மின்பகிர்மான உரிமம்தாரரால் செய்யப்படுதல் வேண்டும் ;

**(2) (1)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரர், பல்லாண்டுக்கான மின்கட்டண கட்டுப்பாட்டுக் கால அளவு அல்லது நிதியாண்டு ஒவ்வொன்றின் தொடக்கத்திற்கு முன்பு ஓராண்டிற்கு மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கான நிலையை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**(3)** மின்பகிர்மான உரிமம்தாரார், மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கான தொழில்நுட்ப நிலையை மதிப்பிடுகையில் செயலகம் மற்றும் ஆணையத்தினால் மேம்படுத்தப்பட்ட செய்முறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

**6. மின்தேவைத்தரப்பு மேலாண்மை இலக்குகள்:–**

**(1)** ஆணையம், மின்பகிர்மான உரிமம்தாரருக்கான மின்தேவைத்தரப்பு மேலாண்மை இலக்குகளை நிர்ணயித்தல் வேண்டும்;

**(2)** மின்பகிர்மான உரிமம்தாரருக்கான மின்தேவைத்தரப்பு மேலாண்மை இலக்குகளை நிர்ணயிக்கையில், ஆணையம், மின்நுகர்வோர் கலப்பு, மின்சுமை குறிப்பு முதலியவை போன்ற காரணிகளை உரியவாறு பரிசீலனை செய்தல் வேண்டும் ;

**(3)** மின்தேவைத்தரப்பு மேலாண்மை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:–

(a) மின்சுமை வளர்ச்சியில் குறைப்புகளின் விழுக்காடு ;

(b) கிலோவாட் மற்றும் கிலோவாட் மணியில் சேமிப்புகள் ;

(c) மின்சுமையை ஏற்பதற்கு மொத்த ஆதாரங்களின் விழுக்காட்டில் சேமிப்புகள் ;

**(4)** இலக்குகளை நிர்ணயிக்கையில், ஆணையம், மின்பகிர்மான உரிமம்தாரரால் மதிப்பிடப்பட்டவாறு மாநிலத்திலுள்ள தொழில் நுட்ப நிலை மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டங்களின் தொழில் நுட்ப பொருளாதார நிலைக்கும் தன்மை முதலியவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும்.

**7. மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடைமுறையின் பேரிலான வழிகாட்டுதல்கள்:–**

**(1)** செயலகத்தினால் மற்றும் ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட பொதுவான வழிகாட்டுதல்கள், பின்வரும் நடவடிக்கைகளை அளிக்க வேண்டும் :–

(a) மின்சுமை மற்றும் சந்தை பற்றிய ஆய்வு ;

(b) மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் ;

(c) மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களின் செலவுக் குறைப்பை மதிப்பிடுதல்;

(d) மின்தேவைத்தரப்பு திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் அறிக்கை செய்தல் ;

(e) மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களுக்கான தகுதி அளவுகள் ;

(f) மின்தேவைத்தரப்பு மேலாண்மை இலக்குகளை நிர்ணயிப்பதற்கான மற்றும் நிதியுதவி அளவுகளுக்கான முறைமை ;

(g) தரவுத்தள கட்டமைப்பு உருவாக்கம்.

**(2)** அத்தகைய வழிகாட்டுதல்களை பிறப்பித்தல், மின்பகிர்மான உரிமம்தாரரால் முதல் மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தை தயாரிப்பதற்கான மற்றும் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனையாக இருத்தல் ஆகாது.

## அத்தியாயம் III : மின்தேவைத்தரப்பு மேலாண்மைப் பிரிவு

**8. மின்தேவைத்தரப்பு மேலாண்மைப் பிரிவை அமைத்தல், அதன் பங்குகள் மற்றும் பொறுப்புகள்:–**

**(1)** மின்பகிர்மான உரிமம்தாரர், இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் மேற்பார்வைப் பொறியாளர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் தலைமையில் ஒன்றுபட்ட அளவில் மின்தேவைத்தரப்பு மேலாண்மைப் பிரிவு மற்றும் செயற்பொறியாளர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் தலைமையில் ஒவ்வொரு மண்டல அளவிலும் துணைப்பிரிவு, இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள் மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உருவாக்குதல் வேண்டும்.

**(2)** இது குறித்து அமைக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மைப் பிரிவு மற்றும் துணைப்பிரிவுகள், குறிப்பாக மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடவடிக்கைகளை கவனித்துக் கொள்ளுதல் வேண்டும் மற்றும் மின்தேவைத்தரப்பு தொடர்பான பணிகள் அனைத்தையும் செய்வதற்கு பெரிதும் உகந்த பணியாட்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

**(3)** மின்தேவைத்தரப்பு மேலாண்மைக் குழு மற்றும் துணைக்குழுக்கள், தனிப்பட்ட மின்நுகர்வோருக்கு, அவர்களுடைய வீடுகள்/தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் முதலியவற்றில் மின்தேவைத்தரப்பு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளைச் செய்வதற்கு ஒன்று இலவசமாக அல்லது நியாயமான கட்டணத்தில் ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(4) அவ்வாறு அமைக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு குழு மற்றும் துணைக்குழுக்கள், இந்த ஒழுங்குமுறைவிதிகளின்படி தனக்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளைச் செய்வதற்குத் தேவையான அதிகாரம் மற்றும் வளங்கள் வழங்கப்படுதல் வேண்டும் ;

(5) மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்குழு:–

(a) மின்சுமை ஆய்வு மற்றும் அடிப்படைத்தரவு வளர்ச்சி ;

(b) மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்டத்தை உருவாக்குதல் ;

(c) செலவுச் சலுகை ஆய்வு, நிறைவேற்றுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கை செய்வதற்கான மற்றும் அளவீடு மற்றும் சரிபார்த்தலுக்கான திட்டங்கள் உள்ளடங்கலாக மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி ;

(d) மின்தேவைத்தரப்புத் திட்டம் மற்றும் தனிப்பட்ட செயற்திட்டங்களுக்கு தேவையான ஒப்புதலளிப்புக்களை நாடுதல்

(e) மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் ; மற்றும்

(f) ஆணையத்தினால் அவ்வப்போது குறித்தளிக்கப்படும், பிற ஏதேனும் கூடுதல் செயற்பணி ஆகியவற்றிற்கு பொறுப்பாகும்.

## அத்தியாயம் IV : மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழு

### 9. மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக் குழுவை அமைத்தல் மற்றும் அதன் செயற்பணிகள்:–

(1) மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழு ஆணையத்தினால் அமைக்கப்படுதல் வேண்டும். அது, மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஒழுங்குமுறைவிதிகளின்படி மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டத்தைச் செய்வதற்கு உரிமம்தாரர் மற்றும் ஆணையத்திற்கு உதவி செய்வதற்கு வழிகாட்டும் முகமையாக இருத்தல் வேண்டும். மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக் குழு கீழ்கண்டவர்களைக் கொண்டதாகும் :–

(a) ஆணையத்தின் செயலாளர் அதன் கூட்டத்தைக் கூட்டுபவராகச் செயற்படுவார் ;

(b) இயக்குநர்/பொறியியல் மின்தேவைத்தரப்பு மேலாண்மை – ஆலோசனைக் குழுவின் செயலாளராகச் செயற்படுவார் ;

(c) மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து தலைமைப் பொறியாளர் படிநிலைக்குக் குறையாத ஒரு பிரதிநிதி ;

(d) மாநில மின்செலுத்தப்பணி நிறுவனத்திலிருந்து தலைமைப் பொறியாளர் படிநிலைக்குக் குறையாத ஒரு பிரதிநிதி ;

(e) அரசு தலைமை மின்ஆய்வாளர் (மின்தணிக்கை மற்றும் திறனுக்கானச் சுட்டியமர்த்தப்பட்ட மாநில முகமை) ;

(f) பொது மேலாளர் / தமிழ்நாடு மின்வளர்ச்சி முகமை ;

(g) கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழிற்சாலை, வேளாண்மை மற்றும் மின்துறையில் சிறப்பு அறிவு அல்லது அனுபவம் உடைய பொது மக்கள் ஆகியோரிடமிருந்து அதிகபட்சம் ஐந்து எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் ஆணையத்தினால் நியமனம் செய்யப்படவேண்டும்.

**(2) மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழுவின் செயற்பணிகள்:–**

(a) மின்தேவைத்தரப்பு மேலாண்மை நிலையை மதிப்பிடுவதற்கு கடைசிப் பயன் தொழில்நுட்பங்கள், வழக்காற்று முறைகள், பணம் செலுத்துவதற்கான விருப்பம், நுட்பமான ஆய்வுகள், சந்தை ஆராய்ச்சி முதலியவற்றின் மீது தகவல் பெறுவதற்கு மின்நுகர்வோர் பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் மின்சுமை பற்றிய ஆய்வை தொடர்ச்சியாக நடத்துவதற்கு உரிமம்தாரருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(b) உரிமம்தாரரால் மேம்படுத்தப்பட்டபடும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் / இயக்கங்கள் / பொருட்காட்சிகள் மின்நுகர்வோரிடையேயான கலந்துரையாடல் கூட்டங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புதலளித்தல் மற்றும் அதன் பின்பு அதனை மேற்பார்வை செய்தல் ;

(c) உரிய மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்கள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களிடையே பரிமாற்றம் செய்வதற்கு ஊக்குவித்தல் ;

(d) மின்தேவைத்தரப்பு மேலாண்மையை ஊக்குவிப்பதற்கு மின்கட்டண ஏற்புகளை புதியதாக அமைப்பதற்கு ஆலோசனை வழங்குதல் ;

(e) உரிமம்தாரால் சமர்ப்பிக்கப்படும் மின்தேவைத்தரப்பு செயற்திட்டம் மற்றும் மின்தேவைத்தரப்புத் திட்டங்களை மறுஆய்வுசெய்தல் மற்றும் மதிப்பீடு செய்கையில் மற்றும் ஒப்புதலளிக்கையில் ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(f) மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்திற்கு நிதியுதவியளிப்பதற்கு நிதியாளரால் / வங்கியாளரால் உருவாக்கப்பட்ட வரையறைகளை மதிப்பாய்வு செய்தல் ;

(g) தேவைப்படும் போதெல்லாம் மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டம் / செயற் திட்டத்தை கண்காணிக்க, மறு ஆய்வு செய்ய, மதிப்பாய்வு செய்ய, அளவீடு செய்ய மற்றும் சரிபார்க்க ஆரம்பிப்பதற்கு ஆணையத்திற்கு ஆதரவு அளித்தல் ;

(h) ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட மின்தேவைத்தரப்பு செயற்திட்டங்களின் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல் ;

(i) காலாண்டு அடிப்படையில் மின்தேவைத்தரப்பு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றி ஆணையத்திற்கு அறிவித்தல் ;

## அத்தியாயம் V : மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடவடிக்கை

### 10. மின்சுமை மற்றும் சந்தை ஆய்வு மற்றும் அடிப்படை தரவு மேம்பாடு:—

**(1)** மின்பகிர்மான உரிமம்தாரர் தேவையான அடிப்படை தரவை உருவாக்குவதற்கு, மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கான மின்நுகர்வோர் பிரிவுகள் மற்றும் இறுதியான பயன்பாடுகள் ஆகியவற்றின் இலக்குகளை குறித்துக்காட்டுவதற்கு மின்சுமை ஆராய்ச்சியை மேற்கொள்தல் வேண்டும்.

**(2)** மின்பகிர்மான உரிமம்தாரர், குறித்தவகை மின்திறன் தொழில் நுட்பங்கள் மற்றும் அவற்றின் பயன்பாட்டிற்கான சந்தை நிலையை மதிப்பிடுவதற்கும், முக்கியமான நிறைவேற்றுகைக்குரிய சுட்டிகளை நிறுவுவதற்கும், இருந்துவரும் அடிப்படை சந்தை நிலைமைகளை தீர்மானிப்பதற்கும் சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் ;

**(3)** மின்சுமை மற்றும் சந்தை ஆய்வின் விளைவுகளின் அடிப்படையில், மின்பகிர்மான உரிமம்தாரர், அதன் மின்வழங்கல் பகுதிக்காக அடிப்படை தரவை மேம்படுத்துதல் வேண்டும் ;

**(4)** மின்பகிர்மான உரிமம்தாரர், தன்னுடைய மின்வழங்கல் பகுதியில் முழுமையான அடிப்படைத் தரவு கிடைக்கும் வரையில் கிடைக்கக்கூடிய தரவு மற்றும் மின்திறன் செயலகத்தினால் முடிக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் தொடக்க சில மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டங்களை வடிவமைக்கலாம், மேம்படுத்தலாம் மற்றும் செயற்படுத்தலாம். அத்தகைய தொடக்க மின்தேவைத் தரப்பு திட்டங்கள் மின்பகிர்மான உரிமம்தாரரால் வடிவமைக்கப்படுவதற்கான முன்தேவையாக அடிப்படைத்தரவை நிறுவுதல் இருத்தல் கூடாது.

### 11. மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தை உருவாக்குதல்:—

**(1)** மின்பகிர்மான உரிமம்தாரர், இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஓராண்டிற்குள் கட்டுப்பாட்டுக் காலத்தை உள்ளடக்கும் தொலைநோக்கு மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி ஒப்புதலுக்காக ஆணையத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தத் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(a) மின்தேவைத்தரப்புத் திட்டத்திற்கான ஒட்டுமொத்த குறிக்கோள் ;

(b) மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தின் பகுதியாக அமையும் மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களின் விவரிப்பு ;

(c) முழுவதுமாக அந்தத் திட்டத்திலுள்ள ஒவ்வொரு செயற்திட்டத்தின் நடைமுறை நிறைவேற்றம் மற்றும் பட்டியல் ;

(d) கண்காணிப்பு செய்வதற்கு மற்றும் அறிக்கையளிப்பதற்கான திட்டம் ;

(e) சுட்டிக் காட்டப்படும் நற்பயன் அளிக்கக்கூடிய செலவை மதிப்பிடும் செயற்திட்டங்கள்,

**(2)** முதலாவது மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டம், நிகழ்கின்ற பல்லாண்டுக்கான கட்டுப்பாட்டுக் காலத்தின் முடிவு வரையிலான காலஅளவு வரை நடைமுறையில் இருக்கும் மற்றும் பிந்திய மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டங்கள் **12** ஆம் ஒழுங்குமுறைவிதியில் வகைசெய்யப்பட்டவாறு நடைமுறையில் இருக்கும்.

**(3)** மின்பகிர்மான உரிமம்தாரர், அதனுடைய தொலைநோக்குத் திட்டத்தில், செயலகத்தினால் மேம்படுத்தப்பட்ட மின்தரப்பு மேலாண்மைத் திட்டங்கள் (பல மாநிலங்களுக்கான செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக) அறிவிக்கப்படும் பொழுது அவற்றை இணைத்துக் கொள்ள வேண்டும்.

**(4)** மின்பகிர்மான உரிமம்தாரர் தொலைநோக்குத் திட்டத்துடன் வேறுபடாத ஆண்டுத் திட்டத்தை, வர இருக்கிற ஆண்டிற்காக ஆண்டு நிறைவேற்றுகை மறு ஆய்வுடன் சேர்த்து சுழற்சி அடிப்படையில் சமர்பித்தல் வேண்டும்.

**(5)** மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்டத்தில், பல்வேறு மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களின் தேர்வு மற்றும் முந்துரிமை பின்வரும் காரணிகளால் வழிநடத்தப்படுதல் வேண்டும்:—

(a) நற்பயன் அளிக்கக்கூடிய செலவு ;

(b) **3**ஆம் ஒழுங்குமுறைவிதிகளில் சுட்டிக்காட்டப்படும் மின்தேவைத்தரப்பு மேலாண்மை நோக்கங்கள் ;

(c) செயலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய அளவு முயற்சிகளுக்கு இடைவினைவான உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்கள் ; மற்றும்

(d) உயர்ந்தளவு பார்க்கக்கூடிய செயற்திட்டங்கள் மற்றும் மின்நுகர்வோருக்கு விழிப்புணர்வை உருவாக்குவதற்கு காரணமான நிலை ;

**12. மின்தேவைத்தரப்பு திட்டத்தை ஆணையம் மறு ஆய்வு செய்தல் மற்றும் ஒப்புதலளித்தல் :—**

**(1)** மின்பகிர்மான உரிமம்தாரர், அடுத்த பல்லாண்டுக்கான மின்கட்டண திட்டகாலத்தின் தொடக்கத் தேதியிலிருந்து குறைந்தது ஆறுமாதங்களுக்கு முன்பு ஆணையத்தின் ஒப்புதலளிப்பிற்கு மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டும். திட்டக்காலஅளவு, நேரிணையான பல்லாண்டுக்கான மின் கட்டணவித காலத்துடன் ஒத்திருத்தல் வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரால் சமர்ப்பிக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டம் தாள்படியிகளிலும் மென்படிகளிலும் இருத்தல் வேண்டும்.

**(2)** ஆணையம், மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தின் ஒப்புதலுக்கு இசைவு அளிப்பதற்காக அலுவல் நடத்தை ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான நடைமுறைகளை மேற்கொள்ளலாம் மற்றும் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அலுவல் நடத்தை ஒழுங்குமுறைவிதிகளின்படி பல்வகை மனு தாக்கல் செய்யப்படவேண்டும் ;

**13. மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்ட ஆவணத்தைத் தயாரித்தல்:—**

**1.** மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தபின்பு, மின்பகிர்மான உரிமம்தாரர், ஒப்புதலளிக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு செயற்திட்டங்கள் அனைத்திற்காகவும், ‘‘மின்தேவைத்தரப்பு செயற்திட்ட ஆவணத்தைத்’’ தயார் செய்தல் வேண்டும்.

**2.** செயற்திட்ட ஆவணம், திட்டத்தில் அடங்கியுள்ள ஒப்புதலளிக்கப்பட்ட தனிப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுதல், கண்காணிப்பு, மறுஆய்வு முதலியவற்றைச் செய்யும். ஒவ்வொரு செயற்திட்ட ஆவணமும், பின்வருவனவற்றை உள்ளடக்கும்:—

(a) செயற்திட்டத்தின் விவரணம்;

(b) செயற்திட்டத்திற்கான நோக்கங்கள் மற்றும் நியாயம்;

(c) மின்நுகர்வோர் பிரிவுகள் மற்றும் மதிப்பிடப்பட்ட பங்கு பெறுதலின் அளவு;

(d) அடிப்படையின் மதிப்பீடு;

(e) நற்பயன் அளிக்கக்கூடிய செலவிற்கு இணங்க செயற்திட்டத்தின் மதிப்பீடு;

(f) செலவு மற்றும் நிறைவேற்றுகை ஊக்கத்தொகை பிடித்தத்திற்கான செயலமைவுத் திட்டம்;

(g) சந்தைப்படுத்துதல், ஒப்புவிப்புதந்திரம், மற்றும் நிறைவேற்றுகை பட்டியல்;

(h) நிறைவேற்றுகை செயலமைவுத்திட்டம், உதாரணமாக, மின்பணி நிறுமங்கள், மின்தேவைத்தரப்பு ஏலம், மின்தேவைத்தரப்பு ஆதாரத்தைக் கையகப்படுத்துதல் முதலியவை;

(i) திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு; மற்றும்

(j) மின்நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பயிற்சி/கருத்தரங்குகள் / பயிலரங்குகளுக்கான திட்டம்.

**14. மின்தேவைத்தரப்பு மேலாண்மைச் செயற்திட்ட ஆவணத்திற்கு ஒப்புதலளித்தல்:—**

1. மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டம் எதனையும் நிறைவேற்றுவதற்கு முன்பு, மின்பகிர்மான உரிமத்தாரர் ஆணையத்தின் ஒப்புதலளிப்பை பெறுதல் வேண்டும்;

2. இந்த ஒழுங்குமுறை விதிகளின் **3**ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்கு இணங்க இருக்குமானால், ஆணையம் செயற்திட்ட ஆவணத்திற்கு ஒப்புதலளித்தல் வேண்டும். ஆணையம், மின்தேவைத்தரப்பு மேலாண்மை நோக்கங்களுக்கு ஒத்திருக்கிறது என்று உறுதி செய்ய, உத்தேசிக்கப்பட்ட அல்லது தொடர்ந்து நடக்கும் செயற்திட்டங்களில் மாற்றமைவுகள் செய்வதற்கு உத்தரவிடலாம். எனினும், ஆணையம், மின்பகிர்மான உரிமம்தாரர் செயற்திட்டத்தை மாற்றம் செய்தலை மின்நுகர்வோருக்கு தெரிவிக்க போதிய கால அவகாசத்தை அனுமதித்தல் வேண்டும்.

(3) மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழு, மின்பகிர்மான உரிமைம்தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை கூர்ந்தாய்வு செய்தல் வேண்டும். குழு, கூட்டங்களை நடத்துதல் வேண்டும், செயற்திட்டங்கள், அவைபொறுத்து தன்னுடைய கருத்துக்கள் அனைத்தையும் பதிவுசெய்தல் வேண்டும், குறைகள், எவையேனுமிருப்பின் அவை நீக்கப்படவேண்டும். அதன்பின்பு, குழு, ஒவ்வொரு செயற்திட்டத்தையும் மதிப்பாய்வு செய்தல் வேண்டும் மற்றும் திருப்தியடையுமானால், செயலாளர், விளக்கக்குறிப்புடன் செயற்திட்டங்களை ஆணையத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஆணையம், மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக் குழு அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து, தெளிவுரைகள், எவையேனுமிருப்பின் அவற்றை பெறலாம் மற்றும் இந்த செயற்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கலாம். தேவைப்படுமானால், ஆணையம், மின்பகிர்மான உரிமம்தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களுக்கு ஒப்புதல்அளிக்கும் முன்பு மாநில ஆலோசனைக் குழுவிற்கு அதனைச் சுட்டியனுப்பலாம்.

(4) ஆணையம், கட்டிடவிதித்தொகுப்பு, வேளாண் நீர்இறைப்பான்கள் உள்ளடங்கலாக மின்திறனுள்ள அல்லது நட்சத்திரக் குறியிட்ட சாதனங்களை பயன்படுத்துதல் தொடர்பாக மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடவடிக்கைகளை ஊக்குவிக்கலாம்.

**15. மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களிள் நிறை வேற்றுகை**

1. மின்பகிர்மான உரிமத்தாரர், அவ்வப்போது, ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க, மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டங்களின் நிறைவேற்றத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்;

2. செயற்திட்டத்தின் நிறைவேற்றுகை, ஆணைத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்;

3. மின்பகிர்மான உரிமம்தாரர், விரைவாக இலாபமடையும் மின்தேவைத்தரப்பு மேலாண்மைச் செயற்திட்டங்களின் நிறைவேற்றத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்;

4. மின்பகிர்மான உரிமம்தாரர் ஒன்று தாமாகவோ அல்லது உரிய தனிப்பட்ட நிறுவனத்தை ஈடுபடுத்துவதன் மூலமாகவோ தம்மிடம் குறித்தளிக்கப்பட்ட நிறைவேற்றுகை நடவடிக்கைகளை செய்தல் வேண்டும். அவ்வாறு செய்கையில், மின்பகிர்மான உரிமம்தாரர், தொடர்ச்சி மற்றும் ஒத்ததன்மை பேணப்படுள்ளது மற்றும் மின்நுகர்வோரின் நலன் விட்டுக்கொடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**16. செலவு பிடித்தத்திற்கான செயலமைவுத்திட்டம்:–**

1. மின்பகிர்மான உரிமம்தாரர், திட்டம், வடிவமைப்பு மற்றும் செயற்திட்டங்களின் நிறைவேற்றுகையுடன் இணைந்துள்ள நிகர உயரும் செலவுகள், எவையேனுமிருப்பின், அவற்றை, அடையாளங்காணுதல் வேண்டும்;

2. மின்பகிர்மான உரிமம்தாரர், மின்கட்டணம் அல்லது வேறுபிற செயலமைவுத்திட்டத்தின் வாயிலாக மொத்த உயரும் செலவுகளைப் பிடித்தம் செய்வதற்கான முறைமையை முன்மொழியலாம். இவ்வாறு வரையறுக்கப்பட்ட தொகை, மின்தேவைத்தரப்பு மேலாண்மை நிதி என்று தனியாக வைக்கப்படலாம் மற்றும் மின்தரப்பு மேலாண்மை நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படலாம்.

3. செலவை திரும்பப் பெறுவதற்கான தகுதியின் பொருட்டு, ஒவ்வொரு செயற்திட்டமும்;–

(a) நிறைவேற்றப்படுவதற்கு முன்பு ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டும்;

(b) ஒப்புதலளிக்கப்பட்ட செயற்திட்ட திட்டத்திற்கிணங்க நிறைவேற்றப்பட வேண்டும்;

(c) செயலாக்கச் செலவு திறம்பட நிறைவேற்றப்பட வேண்டும்;

4. செலவு நற்பயன் அளிக்கக்கூடிய வகையில் இல்லாத ஆனால் சமுதாயத்திற்கு அதிகளவு பயன் அளிக்கக் கூடிய மின்தேவைத்தரப்பு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு மின்பகிம்மான உரிமம்தாரருக்கு ஆணையம் உத்தரவிடலாம்.

5. மின்பகிர்மான உரிமம்தாரர், மின்தேவைத்தரப்பு செயற்திட்டங்களை திட்டமிடுதல், மின்சுமை ஆய்வு நடத்துதல், வடிவமைத்தல், நிறைவேற்றுதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் உள்ளடங்கலான மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடவடிக்கைகளில் எதிலும் தம்மால் செய்ய நேர்ந்த செலவுகள் அனைத்தையும் மின்கட்டண அமைப்பு வாயிலாக தம்முடைய நிதியை இயல்விப்பதற்கு தம்முடைய ஆண்டுவருவாய்த் தேவையில் இந்த செலவுகளைச் சேர்ப்பதன்மூலம், வசூலிப்பதற்கு அனுமதியளிக்கப்படுதல் வேண்டும்;

6. ஆணையம், அத்தகைய அணுகுகை நலன்பயக்கக் கூடியதாக காணப்படுமானால், பிந்திய தேதியில் பொது நலக் கட்டணத்தை வசூலிப்பதன் வாயிலாக பொது நிதியங்களை உருவாக்குவதல் போன்று மின்தேவைத்தரப்பு மேலாண்மை நிதியத்திற்கு நிதியை கூட்டும் பிற முறைகளை ஏற்பதற்கு மின்பகிர்மான உரிமம்தாரருக்கு உத்தரவிடலாம்;

7. மின்பகிர்மான உரிமம்தாரர், சமமான அமர்த்துகைகள் மூலம் மின்நுகர்வோர் வணிகங்களில் மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஆணையத்தின் முன் ஒப்புதலளிப்பைப் பெறுதல் வேண்டும், ஆனால், அத்தகைய செயற்திட்டங்கள், முதலீடுகளை திரும்பப் பெறுவதற்கு தகுதியுடையதாகும் மற்றும் அவை ஆண்டு வருவாய்த் தேவை ஒப்புதல் நடவடிக்கையின் போது மதிப்பாய்வு செய்யப்படும்.

**17. மின்தேவைத்தரப்பு மேலாண்மை வரவு செலவுத்திட்டம்:–**

1. இந்த ஒழுங்குமுறை விதிகளின் பொதுப்பாங்கிற்கு ஊறு இல்லாமல், பின்வரும் வகைமுறைகள் பொருந்துதல் வேண்டும்:–

(a) மின்பகிர்மான உரிமம்தாரர், பல்லாண்டுக்கான மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டம், மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்ட வரவு செலவு திட்டங்களை அமைத்தல் வேண்டும் மற்றும் பல்லாண்டுக்கான மின்கட்டண ஒப்புதலளிப்பு மற்றும் ஆண்டுவருவாய்த் தேவைகள் ஒப்புதலளிப்பு நடவடிக்கைகளின் போது அதனை சமர்ப்பித்தல் வேண்டும்;

(b)ஒன்று சேர்க்கப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் மற்றும் அல்லது தனிப்பட்ட மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டங்கள் / செயற்திட்டங்களுக்கு ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்பு மட்டுமே வரவு செலவுத் திட்டம் செலவு செய்யப்படுதல் வேண்டும்;

(c)மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டம் மற்றும் அதனுடன் இணைந்த வரவு செலவு திட்டங்கள், உரிமமுள்ள பகுதிகளுக்குள் சாத்தியமான செயற்திட்டங்களின் முன்னுரிமையுடன் போதுமானதாக இருத்தல் வேண்டும்;

(d)ஒவ்வோர் ஆண்டும் செலவு செய்யப்படும் மின்தேவைத்தரப்பு வரவு செலவுத்திட்டம் மாநிலத்திலுள்ள மின்நுகர்வோர் நலனுக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குமாறு மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழுவினால் உத்தரவிடப்படலாம் என்று விரிவான மின்சுமை ஆய்வு நடவடிக்கை மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் அத்தகைய இலக்குகள் மேம்படுத்தப்படுமிடத்து சேமிப்பு இலக்குகள் கிலோவாட் மற்றும் கிலோவாட் மணியுடன் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

1. மின்பகிர்மான உரிமம்தாரர், உச்சநேர மின்சுமை சேமிப்பு அல்லது மாற்றல் / குறைத்தல் தொடர்பான மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்ட நிறைவேற்றுகைத் திட்டமிடல் நேரிணையான வரவு–செலவு திட்ட ஒதுக்கீடுகள் ஆகியவற்றின் ஆண்டுவாரியான திட்ட விவரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்;

2. ஒன்று சேர்க்கப்பட்ட ஆண்டுவாரியாகத் தேவைப்படும் நிதியங்கள் மற்றும் சாதனைகள், முறையே ஆண்டு மின்தேவைத்தரப்பு மேலாண்மை வரவு–செலவுத் திட்டங்கள் மற்றும் ஆண்டு மின்தேவைத்தரப்பு மேலாண்மை இலக்குகளாக இருத்தல் வேண்டும்;

3. திட்டமிடல் சுழற்சியின் தொடக்கத்தில் தீர்மானிக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட இந்த ஆண்டு மின்தேவைத்தரப்பு மேலாண்மை வரவு–செலவுத்திட்டங்கள் மற்றும் இலக்குகள், ஆண்டு நிறைவேற்றுகை மறு ஆய்வின் போது மறுபடியும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக்குழு தட்பவெப்பநிலை மாற்றத்தின் பேரிலான ஐக்கிய நாடுகள் திட்ட அவையின் அல்லது பிற ஏதேனும் நிதியுதவிக்கான உடன்படிக்கை வரைவின், சுத்தப்படுத்துதல் வளர்ச்சி செயலமைவுத் திட்டத்தைப் பயன்படுத்தும் நிதியுதவி செயற்திட்டங்களை மேம்படுத்துவதற்கு மின்பகிர்மான உரிமம்தாரரால் எடுக்கப்படும் சிறப்பு கணக்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

6 **மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்ட நிறைவேற்றுகை அல்லாத பிற மின்தேவைத்தரப்பு மேலாண்மை நடவடிக்கைகளுக்கான நிதியுதவி:–**

மின்பகிர்மான உரிமம்தாரர், மின்சுமை ஆய்வு, மின்நுகர்வோர் ஆய்வுகள், மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்டம் மற்றும் செயற்திட்ட வளர்ச்சி நடவடிக்கைகள், ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வு செய்வது மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக் குழுவினால் உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் எதற்கும் நிதியுதவியளித்தல், நிலை ஆய்வுகள் நடத்துதல், பயிற்சி மற்றும் வளர்ச்சி போன்ற நடவடிக்கைகளுக்காக செய்ய நேர்ந்த (மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டம் மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்ட நிறை வேற்றுகைக்கு அப்பால்) கூடுதல் செலவினங்களுக்காக ஆணையத்திடமிருந்து தனிப்பட்ட வரவு–செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல் வேண்டும்.

7. **மின்நுகர்வோர் விழிப்புணர்வு, தணிக்கை மற்றும் நியாயமான பரிசீலனைகளுக்கான நிதி ஒதுக்கீடு:–**

மின்பகிர்மான உரிமம்தாரர், கீழே விவரிக்கப்பட்ட தன்மையிலான செயற்திட்டங்களை ஊக்குவிப்பதற்கு மின்தேவைத்தரப்பு மேலாண்மை ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆணையத்தினால் முன் ஒப்புதலளிக்கப்பட்ட நியாயமான தொகையை செலவு செய்யப்படுவதற்கு அனுமதியளிக்கப்படுவார்:

(a) மின்சுமை மேலாண்மை / மின்திறன் ஏன், எவ்வாறு, எப்போது மற்றும் எங்கே என்பது குறித்து மின்நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் கல்வியை ஊக்குவிக்கும் மற்றும் கீழ் கண்டவை போன்றவற்றை உள்ளடக்கிய மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்கள் :

(i) மின்தணிக்கை,

(ii) விழிப்புணர்வு கருத்தரங்குகள்,

(iii) மின்திறன் மற்றும் மின்சுமை மேலாண்மை நிருபித்தல் திட்டங்கள்,

(iv) பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், வட்டமேசை மாநாடுகள், வணிக பரிமாற்றக் கூட்டங்கள் (வாங்குபவர்–விற்பவர் கூட்டங்கள்)

(v) நிலையான காட்சி / பரிசோதனை மையங்களுடனான மாதிரி “பசுமை” /தீவிர மின்திறன் கட்டிடங்களை நிறுவுதல் : (மின்சேமிப்பு கட்டுமான விதித்தொகுப்பை விட கூடுதலான கட்டிடங்கள்)

(b) வறுமை கோட்டிற்கு கீழுள்ள மின்நுகர்வோர் / பொதுவாக குறைந்த வருவாய் நுகர்வோராகக் கருதப்படும் மாதம் ஒன்றுக்கு 100 யூனிட்டுகளுக்குக் குறைவாக நுகரும் மின்நுகர்வோருக்கான மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்கள்.

**18. மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் அதுபற்றி அறிக்கை செய்தல் :–**

(1) மின்பகிர்மான உரிமம்தாரர், அவ்வப்போது, திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மைச் செயற்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் அதுபற்றி அறிக்கை செய்தல் வேண்டும்;

(2) மின்தேவைத்தரப்பு மேலாண்மை திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் மின்தேவைத்தரப்பு மேலாண்மைத் திட்டத்தின் நிறைவேற்றத்திற்காகச் செய்ய நேர்ந்த செலவுகள் பற்றிய அறிக்கைகள் ஆணையத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின்பகிர்மான உரிமம்தாரரால் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

**19. மின்தேவைத்தரப்பு மேலாண்மைச் செயற்திட்ட மதிப்பாய்வு, அளவீடு மற்றும் சரிப்பார்த்தல்:–**

(1) மின்பகிர்மான உரிமம்தாரர், மின்தேவைத்தரப்பு மேலாண்மைச் செயற்திட்டங்களிலிருந்து சேமிப்புகளை மதிப்பாய்வு செய்தல், அளவிடு செய்தல், சரிபார்த்தல் ஆகியவற்றிற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும்;

(2) மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களின் மூன்றாம் தரப்பு மதிப்பீட்டு அளவீடு மற்றும் சரிபார்த்தல் ஆணையத்தினால் அல்லது மூன்றாம் தரப்பினால் மேற்கொள்ளப்படலாம். அத்தகைய மூன்றாம் தரப்பினர் ஒன்று நேரடியாக ஆணையத்தினால் அல்லது ஆணையத்தின் ஒப்புதலுக்குப் பின்னர் மின்பகிர்மான உரிமம்தாரரால் நியமிக்கப்படுவார் மற்றும் மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்துவதற்கு ஆணையத்திடமிருந்து ஒப்புதல் பெறப்படுதல் வேண்டும். முகமையை ஈடுபடுத்துகையில், அந்த முகைமை மாநிலத்தில் மின்நுகர்வோரின் நலன்களுக்கு முரணான பிற நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை என்பதை ஆணையம் உறுதி செய்தல் வேண்டும்;

(3) மின்பகிர்மான உரிமம்தாரர் ஆணையத்திடம் அல்லது மின்தேவைத்தரப்பு மேலாண்மை செயற்திட்டங்களிலிருந்து சேமிப்புகளை அளவிடுவதற்கும் சரிபார்பதற்கும் ஆணையத்தினால் குறித்தளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரிடம் அவசியமான தகவல் / புள்ளிவிவரத்தை அளித்தல் வேண்டும்.

**அத்தியாயம் VI மின்தேவைத்தரப்பு மேலாண்மைத்திட்டம் மற்றும் செயற்திட்ட நிறைவேற்ற அறிக்கை**

**20.** மின்பகிர்மான உரிமம்தாரர், விரிவான செயற்திட்ட நிறைவேற்ற அறிக்கையைத் தயாரிக்க வேண்டும் மற்றும் அத்தகைய செயற்திட்டம் நிறைவேற்றப்பட்ட மூன்று மாதத்திற்குள் அதனை ஆணையத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

**21.** அந்த அறிக்கை, செயற்திட்டச் செலவுகள், சாதனைகள், பலன்கள், விளைவுகள், கட்டுப்பாட்டு விதிகள், எதிர்பட்ட இடர்ப்பாடுகள், முடிவுகள், பரிந்துரைகள், கற்றறிந்த பாடங்கள், மற்றும் முன்னோக்கிய வழி ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**அத்தியாயம் VII – ஊக்கத்தொகைகள்**

**22.** ஆணையம், மின்தேவைத்தரப்பு மேலாண்மைக்கு ஆதரவாக உரிய மின்கட்டண குறிக்கீடுகளை செய்வதற்கு ஓர்வுசெய்தல் வேண்டும், அதாவது கால நேரத்துடன் கூடிய மின் கணக்கீட்டை தாழ்வழுத்த மின்னிணைப்புகள் வரை நீட்டித்தல், மின்சுமை மேலாண்மை, மின்திறன் கட்டிடங்கள் / சாதனங்கள் முதலியவற்றிற்கு தள்ளுபடியளித்தல் முதலியன:

**23.** ஆணையம், மின்தேவைத்தரப்பு மேலாண்மை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அதிகரிப்பதற்கும் தகுந்த மின்பகிர்மான நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகைகள் அளிக்கலாம்.

**அத்தியாயம் VIII பல்வகைப்பட்டவை**

**24.** ஆணையம் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் எதனையும், எந்த நேரத்திலும், சேர்த்தல், மாற்றம், மாறுதல், மாற்றியமைத்தல் அல்லது திருத்தம் செய்யலாம்;

**25.** இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு செயல்விளைவு அளிக்கையில், இடர்ப்பாடு எதுவும் எழுமானால், ஆணையம், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாட்டுகளை நீக்குவதற்கு அவசியமெனத் தோன்றலாகும். மின்சார சட்டத்தின் வகைமுறைக்கு முரணாக இராத வகைமுறைகளைச் செய்யலாம்.

**26.** ஆணையம், அவ்வப்போது, ஒழுங்குமுறை விதிகளின் நிறைவேற்றம் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பொறுத்து ஆணைகளைப் பிறப்பிக்கலாம் மற்றும் உத்தரவுகளை நடைமுறைப்படுத்தலாம்;

**27.** இந்த ஒழுங்குமுறை விதிகளின் படி எழும் பூசல்கள் அனைத்தும், குறையுற்ற தரப்பினரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் ஆணையத்தினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 008,
**2013 மார்ச் 11.**

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS**

LOSS OF CERTIFICATES

It is hereby notified that the Original Higher Secondary Certificates/Matriculation Certificates/Diploma Certificates/ School Certificates of the following pupils are reported to have been lost beyond recovery. Necessary steps are being taken to issue the duplicate of the said Certificates. If the Originals were to be found by anybody, they should be treated as invalid and sent to the Secretary, Board of Higher Secondary Examination/ Directorate of Government Examinations, Chennai-6/Director of Technical Education, Chennai-25/ Inspector/Inspectress of Matriculation and Anglo-Indian Schools as the case may be for cancellation:—

| *C.N.C. Number.* | *Name of the Candidate and Institution.* | *Register Number and Certificate Number.* | *Month and Year.* | *Details of Examination.* | *Reference Number and Date.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| No. VI(2)/49/2013. | | | | | |
| 1 | Johnson Rajkumar Immanuel, H. (17-7-1967) | 28540<br>A 21868<br>120705<br>JR 707361<br>036617<br>01501 | December 2011<br><br>August 2011<br><br>November 1986 | COA<br>Second Class<br>TTJ<br>First Class<br>TEH<br>Second Class | கடித எண் 120342/ட்டி(3)2012, 27—2—2013. |
| No. VI(2)/50/2013. | | | | | |
| 1 | Kumari, C. (30-12-1985) | 235607<br>JE 826222 | February 2005 | TEJ<br>First Class | கடித எண் 121146/ட்டி(3)/2012, 27—2—2013. |

RAMESH CHAND MEENA,
*Commissioner of Technical Education and Chairman, Board of Examinations, Guindy, Chennai-600 025.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU